

## ஒழுங்கு

உபயோகப்படுத்தப்படும் ரீதியில் விளையாட்டுப் பொருட்கள் குழுமங்கள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன. குழுமங்களை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும் அத்துடன் உங்களது வசதிக்காக வர்ணம் தீட்டப்பட்டுள்ளன.

A) நடவடிக்கை (கடுமையான நீலம்)

B) குழந்தை விளையாட்டு (இளம் சிகப்பு)

C) ஒருங்கிணைப்பு (கருஞ் சிகப்பு)

D) பாரபட்சம் (மஞ்சள்)

E) வெளிப்படுத்துதல் (இலேசான நீலம்)

F) கேளிக்கை & ஆட்டங்கள் (பச்சை)



ஒரு கூட்டு முயற்சி
- ஹொல்றொய்ட் நகர கவுன்சில்
- சமூக சேவைகள் திணைக்களம்

உங்களது நூலக அட்டை விளையாட்டுப் பொருட்கள் அத்தோடு நூலக புத்தகங்கள், சீடீக்கள், கசற்கள், வீடியோக்கள், டிவிடிக்கள், சஞ்சிகைகள், மற்றும் கடனுக்கு கிடைக்கக்கூடிய வேறு சாதனங்கள் ஹெ ஈறோய்ட் நகர கவுன்சில் நூலக சேவையில் உள்ள எந்த நுலகத்திலும் வாடகைக்குப் பெற தகுதியளிக்கிறது.

### மெரிலான்ட்ஸ் மத்திய நூலகம்

Cnr. Miller and Newman Streets
Merrylands 2160
தொலைபேசி: 9840 9960
தொலைநகல்: 9840 9955

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள் – வெள்ளி | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மாலை 4.00 |
| ஞாயிற்றுக்கிழமை | மாலை 2.00 – மாலை 5.00 |

### கிறேய்ஸ்டேன்ஸ் கிளை நூலகம்

732 Merrylands Road, Greystanes 2145
தொலைபேசி: 9636 4160
தொலைநகல்: 9688 3061

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி | காலை 9.30 – மாலை 5.30 |
| வியாழன் | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மதியம் 12.00 |

### வென்ட்வேர்த்வீலி கிளை நூலகம்

2 Lane Street, Wentworthville 2145
தொலைபேசி: 9896 0083 அல்லது 9631 7564
தொலைநகல்: 9688 3168

**நேரங்கள்:**

| | |
|---|---|
| திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி | காலை 9.30 – மாலை 5.30 |
| வியாழன் | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மதியம் 12.00 |

TAMIL - Toy Library

Holroyd City
*Built Around People*

# ஹோல்றோய்ட் பொம்மை நூலகம்

இருக்கும் இடம்:
வேன்ட்வேத்வில் கிளை நூலகம்



2 Lane Street, Wentworthville 2145
தொலைபேசி: 9896 0083 அல்லது 9631 7564

| | |
|---|---|
| திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி | காலை 9.30 – மாலை 5.30 |
| வியாழன் | காலை 9.30 – மாலை 8.00 |
| சனிக்கிழமை | காலை 9.00 – மதியம் 12.00 |



## ஏன் பொம்மை நூலகங்கள் தேவைப்படுகின்றன?

பொம்மை நூலகங்கள் விளையாட்டு அனுபவங்களின் மூலம் பிள்ளையின் கற்கையையும், வளர்ச்சியையும் மேம்படுத்துகிறது. விளையாட்டு குழந்தைப்பருவத்தின் முக்கியமான நடவடிக்கை; கற்கை, ஆய்ந்து அறிதல், கையாளுதல், ஆக்கல், கற்பனை செய்தல்.

## நாங்கள் எவற்றை வழங்குகிறோம்

இளம் பிள்ளைகளுக்குத் தகுதியான பல வகையான விளையாட்டுப் பொருட்கள். இயலாமையுடைய பிள்ளைகளுக்கும் சேவை வழங்கப்படுகிறது. நூலகத்தில் இருக்கும் எல்லா விளையாட்டுப் பொருட்களும் பிள்ளைகளின் பல்வகையான திறன்களை விருத்திசெய்ய உதவும் வகையில் தெரிவு செய்யப்படுகிறது. அத்தோடு இது குழுக்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் மகிழ்ச்சியான அனுபவத்தை ஏற்படுத்துகிறது.

## அங்கத்துவம்

விளையாட்டுப் பொருட்களை இரவல் பெறுவதற்கு இலகுவாக ஒரு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யவும், அடையாளம் காட்டும் ஆவணத்தை காண்பியுங்கள், ஒரு சிறிய கட்டணத்தை செலுத்துங்கள்.

## கட்டணங்கள்

| | |
|---|---|
| 1 விளையாட்டுப் பொருள் | வருடத்திற்கு $23.00 |
| 2 விளையாட்டுப் பொருட்கள் | வருடத்திற்கு $34.00 |
| இயலாமை உடையவருக்குரியவை* | வருடத்திற்கு $23.00 |
| குடும்பம்/ஒரு பிள்ளைக்கு ஒரு விளையாட்டுப் பொருள் | வருடத்திற்கு $48.00 |
| குழுவுக்கு** | வருடத்திற்கு $57.00 |

*இயலாமை உடைய அங்கத்தவர்கள் அவர்களது வைத்தியரிடமிருந்து ஒரு கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
**குழு அங்கத்தவர்கள் அவர்களது நிறுவனத்திடமிருந்து ஒரு கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

## இரவல் பெறுவதற்குரிய நிபந்தனைகள்

- தனிப்பட்ட அங்கத்தவர்கள் இரண்டு வாரங்களுக்கு இரவல் பெறலாம்.
- குழுக்கள் 4 விளையாட்டுப் பொருட்கள் 4 வாரங்கள் வரை இரவல் பெறலாம்.
- இயலாமையுடைய அங்கத்தவர்கள் 2 விளையாட்டுப் பொருட்கள் 4 வாரங்களுக்கு இரவல் பெறலாம்.
- நீங்கள் எப்போது இரவல் பெற வேண்டுமாயினும் உங்களது அங்கத்துவ அட்டையைக் கொண்டுவர வேண்டும்.
- நீங்கள் இரவல் பெறும் பொருட்களுக்கு நீங்களே பொறுப்பு.
- நீங்கள் விளையாட்டுப் பொருட்களை திருப்பிக் கொடுக்கும் போது எல்லாத் துண்டுகளும் சரியாக இருக்கிறதா என்பதை உறுதி செய்து டையும் சீட்டும் குறைபடாமல் இருப்பதையும் பார்த்துக் கொள்ளுங்கள்.
- நீங்கள் ஒரு விளையாட்டுப் பொருளை சில துண்டுகள் இல்லாமல் திருப்பிக் கொடுத்தால் உங்களுக்கு அந்தத் துண்டுகளைத் தேடுவதற்கு 4 வார கால அவகாசம் கொடுக்கப்படும் அதன் பின் ஒரு துண்டுக்கு $3.55 படி தண்ட வரி விதிக்கப்படும்.
- இழந்த அல்லது மீண்டும் இரவல் கொடுக்க இயலாத நிலையில் திருப்பிக் கொடுத்த விளையாட்டுப் பொருட்களுக்கு பதிலமர்த்தும் செலவு மற்றும் செயல்முறைக் கட்டணம் ஆகியவை அறவிடப்படும்.
- விளையாட்டு பொருட்கள் திருப்பிக் கொடுக்கும் போது சரி பார்க்கப்படும். நீங்கள் விளையாட்டுப் பொருட்களை உபயோகிக்கத் தொடங்கு முன் விளையாட்டு பொருட்களின் துண்டுகளை எண்ணி அவற்றில் ஏதும் குறைபாடுகள் இருந்தால் நூலகத்திற்கு அறிவிக்கும்படி நாங்கள் சிபாரிசிக்கிறோம்.
- பொம்மை நூலக அங்கத்துவப் பணம் ஒருபோதும் மீளக்கொடுபட மாட்டாது.






## தாமதமாக கட்டணம் செலுத்துதல்

திருப்பிக் கொடுக்கவேண்டிய திகதியிலிருந்து 6 நாட்களின் பின் விளையாட்டுப் பொருள் திருப்பிக் கொடுக்காவிட்டால் ஒரு தண்ட வரி விதிக்கப்படும். 2 வாரங்களுக்குப் பின் விளையாட்டுப் பொருள் கொடுக்காவிட்டால் மீண்டும் ஒரு தண்ட வரி விதிக்கப்படும்.

மொத்த தண்ட வரி $3.30 க்கு கூடினால் மீண்டும் இரவல் பெறுவது அனுமதிக்கப் பட மாட்டாது. திரும்பவும் இரவல் தொடருவதற்கு முன் காலதாமதமான பொருட்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும் அத்துடன் தண்ட வரிகள் செலுத்தப்பட வேண்டும்.

## விளையாட்டுப் பொருட்களைக் கவனித்தல்

எல்லா அங்கத்தவர்களும் விளையாட்டுப் பொருட்களை அவர்களது விசேட நூலகப் பைகளில் வைக்க வெண்டும் என்று கேட்கப்படுகிறார்கள்.

உங்களது பிள்ளையின் உடல்நலத்தை கருத்தில் கொண்டு விளையாட்டுப் பொருட்களை திருப்பிக் கொடுக்குமுன் நீருடன் கலந்த ஒரு பாதுகாப்பான கிருமிநாசினியால் துடைத்து சுத்தம் செய்யும்படி நாம் உங்களைக் கேட்கிறோம்.

## விருந்துப் பொதிகள்

நூலக அங்கத்தவர்களுக்கு வார இறுதியில் ஒரு மேலதிகச் செலவிற்கு பெரிய விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய விசேட குழுமங்கள் வாடகைக்கு கிடைக்கும். மேலதிகத் தகவலைக் கேட்கவும்.